සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

මධ්‍යම පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மத்திய மாகாண கல்வித் திணைக்களம்
Department of Education Central Province

தரம் : 11
11 ශ්‍රේණිය

க.பொ.த (சா/த) முன்னோடிப் பரீட்சை - 2019

65 | T | I

இரண்டாம் மொழி - தமிழ் I, II
දෙවන බස - දෙමළ I, II

நேரம் : 3 மணித்தியாலம்
කාලය : පැය තුනයි

**(65) இரண்டாம் மொழி - தமிழ்**
**வினாத்தாள் I**

**கவனிக்க :**
- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **1** தொடக்கம் **40** வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

සැලකිය යුතුයි :
- සියලු ම ප්‍රශ්නවලට පිළිතුරු සපයන්න.
- අංක 1 සිට 40 තෙක් ප්‍රශ්නවල, දී ඇති (1), (2), (3), (4) පිළිතුරුවලින් නිවැරදි හෝ වඩාත් ගැළපෙන හෝ පිළිතුර තෝරා ගන්න.
- ඔබට සැපයෙන උත්තර පත්‍රයේ එක් එක් ප්‍රශ්නය සඳහා දී ඇති කව අතුරෙන්, ඔබ තෝරා ගත් පිළිතුරෙහි අංකයට සැසඳෙන කවය තුළ (x) ලකුණ යොදන්න.

**Note :**
- Answer **all** questions.
- In each of the questions from **1** to **40**, pick one of the alternatives (1), (2), (3), (4) which is **correct** or **most appropriate.**
- **Mark a cross (x) on the number corresponding to your choice in the answer sheet.**

✷ **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லின் **ஒத்தகருத்துள்ள சொல்லைத்** தெரிவு செய்க.
1 සිට 5 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට **සමාන පදය** තෝරන්න.
In questions **1** to **5**, select the **synonyms** for the words in bold print.

01) என்னைக் காக்கும் **அம்மா**
1) தந்தை 2) தாய் 3) தெய்வம் 4) பெண்

02) **கண்** திறந்து பார்த்தான்.
1) விழி 2) வழி 3) கதவு 4) ஜன்னல்

03) **திருடன்** ஓடத் தொடங்கினான்.
1) வீரன் 2) சிறுவன் 3) கள்வன் 4) இளைஞன்

04) நிலா **வெளிச்சம்** ஜன்னல் வழியே தெரிந்தது.
1) காட்சி 2) படம் 3) உருவம் 4) ஒளி

05) நண்பியை நினைத்து **சந்தோசம்** அடைந்தாள்.
1) மகிழ்ச்சி 2) புகழ்ச்சி 3) சந்தேகம் 4) ஆத்திரம்

✷ **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள சொல்லின் **எதிர்க்கருத்துள்ள சொல்லைத்** தெரிவு செய்க.
6 සිට 10 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරුවලින් ඇති පදයට **විරුද්ධ පදය** තෝරන්න.
In questions **6** to **10**, select the **antonyms** for the words in bold print.

06) சுற்றுலா விடுதிகள் **பல** காணப்படுகின்றன.
1) அதிகம் 2) குறைவாக 3) பல்வேறு 4) சில

07) படகில் **மெதுவாக** ஏறுங்கள்.
1) இலகுவாக 2) வேகமாக 3) சுறுசுறுப்பாக 4) ஒழுங்காக

08) இன்று **வெயில்** அதிகமாக உள்ளது.
1) மழை 2) சூடு 3) குளிர் 4) பனி

09) எமது பாடசாலை அணி **வெற்றி** கண்டது.
1) பரிசு 2) கேடயம் 3) தோல்வி 4) திருப்தி

10) தம்பி **காலையில்** புறப்பட்டான்.
1) மாலையில் 2) இரவில் 3) பகலில் 4) நள்ளிரவில்

✷ **11** தொடக்கம் **13** வரையான வினாக்களில் தடித்த எழுத்தில் உள்ள **பேச்சு வழக்குச் சொல்லுக்கான எழுத்து வழக்குச் சொல்லைத்** தெரிவு செய்க.
11 සිට 13 තෙක් ප්‍රශ්නවල තද කළු අකුරින් දැක්වෙන කථන බසින් ඇති පදයට අදාළ ලිඛිත පදය තෝරන්න.
In questions **11** to **13**, select the words in **written form for the words in spoken form** given in bold print.

11) சரியாக **மூண்டு** மணிக்கு ஆரம்பமாகும்.
1) மூன்டு 2) மூண்று 3) மூன்று 4) முன்டு

12) அவசரமாகக் **குடியுங்க.**
1) கொடுங்க 2) கொடுங்கள் 3) குடிங்க 4) குடியுங்கள்

13) புறாமலை எங்கு **இருக்கு**?
1) இருந்தது 2) இருக்கும் 3) இருக்கிறது 4) இருக்கா

✷ **14** தொடக்கம் **16** வரையான வினாக்களிலுள்ள **இடைவெளிகளை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவு செய்க.
14 සිට 16 තෙක් ප්‍රශ්නවල **හිස්තැන් පිරවීම** සඳහා වඩාත් ම සුදුසු පදය තෝරන්න.
In questions **14** to **16**, select the most **suitable** words to **fill in the blanks.**

14) நாங்கள் பயணம் சென்றோம்.
.................... பயணம் சென்றார்கள்.
1) அவன் 2) அவர்கள் 3) அவைகள் 4) அவள்

15) அவள் புத்தகத்தைத் தேடினாள்.
.................... புத்தகத்தைத் தேடினான்.
1) அவை 2) அவர்கள் 3) அவன் 4) அது

16) அது வேகமாகப் பறந்தது.
.................... வேகமாகப் பறந்தன.
1) அவை 2) அவர் 3) அவள் 4) அவன்

✷ **17** தொடக்கம் **19** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான **முடிக்கும் சொல்லைத்** தெரிவு செய்க.
17 සිට 19 තෙක් ප්‍රශ්නවලට සුදුසු අවසාන පදය තෝරන්න.
In questions **17** to **19**, select the suitable **ending words.**

17) நன்றியுரை செயலாளரால் ................................
1) நிகழ்த்தினார் 2) நிகழ்த்தியது
3) நிகழ்த்தப்பட்டது 4) நிகழ்த்தினாள்

18) இலங்கையில் பல்லின மக்கள் ................................
1) வாழ்கிறான் 2) வாழ்ந்தான்
3) வாழ்வான் 4) வாழ்கிறார்கள்

19) ஆமையும் முயலும் போட்டியில் ................................
1) பங்குபற்றினான் 2) பங்கு பற்றியது
3) பங்கு பற்றின 4) பங்கு பற்றினார்கள்

✷ **20** தொடக்கம் **22** வரையான வினாக்களிலுள்ள வாக்கியங்களின் **இடைவெளிகளுக்குப் பொருத்தமான உருபைத்** தெரிவு செய்க.
20 සිට 22 තෙක් ප්‍රශ්නවල ඇති වාක්‍යවල හිස්තැනට **සුදුසු විභක්ති** ප්‍රත්‍යය තෝරන්න.
In questions **20** to **22**, select the **suitable suffixes** to fill in the blanks.

20) தசரதன் ................................ முடிசூட்ட எண்ணினார்.
1) இராமனால் 2) இராமனை 3) இராமனுக்கு 4) இராமனும்

21) நான் ................................ அப்பம் சாப்பிட்டேன்.
1) சீனியோடு 2) சீனியை 3) சீனிக்கு 4) சீனியில்

22) அப்பா ................................ அன்போடு அழைத்தார்.
1) மகனை 2) மகனுக்கு 3) மகனால் 4) மகனின்

✷ **23** தொடக்கம் **25** வரையான வினாக்களில் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை விடையாகப் பெறக்கூடிய **பொருத்தமான வினாவைத்** தெரிவு செய்க.
23 සිට 25 තෙක් ප්‍රශ්නවල මුලින් දී ඇති වාක්‍යය පිළිතුර වශයෙන් ලබා ගැනීමට **සුදුසු ප්‍රශ්නය** තෝරන්න.
In questions **23** to **25**, select the **suitable questions** to get the sentences given at the **beginning** as the answers.

23) புத்தகத்தை அறையில் தேடிப் பார்த்தேன்.
1) புத்தகத்தை எங்கே தேடிப் பார்த்தீர்கள்?
2) புத்தகத்தை எதனை தேடிப் பார்த்தீர்கள்?
3) புத்தகத்தை எப்படி தேடிப் பார்த்தீர்கள்?
4) புத்தகத்தை ஏன் தேடிப் பார்த்தீர்கள்?

24) அவர்கள் பட்டத்தைப் பறக்க விட்டார்கள்.
1) அவர்கள் எவ்வாறு பறக்க விட்டார்கள்?
2) அவர்கள் ஏன் பறக்க விட்டார்கள்?
3) அவர்கள் எதனைப் பறக்க விட்டார்கள்?
4) அவர்கள் எங்கே பறக்க விட்டார்கள்?

25) எனது தாயின் பிறந்த இடம் கண்டி.
1) உமது தாயின் பிறந்த இடம் எப்படி?
2) உமது தாயின் பிறந்த இடம் எது?
3) உமது தாயின் பிறந்த இடம் எவ்வாறு?
4) உமது தாயின் பிறந்த எத்தனை?

✷ **26** தொடக்கம் **28** வரையான வினாக்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு **மிகப் பொருத்தமான சொல்லைத்** தெரிவு செய்க.
26 සිට 28 තෙක් ප්‍රශ්නවල හිස්තැන් සම්පූර්ණ කිරීමට **වඩාත් සුදුසු පදය** තෝරන්න.
In questions **26** to **28**, select the **most suitable words** to fill in the blanks.

26) நன்றாக விளையாடினார்கள் ................................ வெற்றி கிடைத்தது.
1) ஆயினும் 2) ஏனென்றால் 3) ஆனால் 4) அதனால்

27) அதிகமாக மழை பெய்தது ................................ குடை இருக்கவில்லை.
1) அதனால் 2) எனவே 3) ஏனென்றால் 4) ஆனால்

28) நான் விரைவாக செல்ல வேண்டும் ................................ நாவலப்பிட்டி இரயில் நான்கு மணிக்கு புறப்படும்.
1) ஆயினும் 2) ஏனென்றால் 3) அதனால் 4) எனவே

✷ **29** மற்றும் **30** ஆகிய வினாக்களில் இடம்பெறும் வாக்கியங்களை **அறிவித்தல், அறிவுறுத்தல், தகவல், கட்டளை** என்பவற்றுள் எதற்குரியது எனத் தெரிவு செய்க.
29 හා 30 තෙක් ප්‍රශ්නවල ඇතුළත් වාක්‍ය, **නිවේදන, උපදෙස්, තොරතුරු,** විධාන යන ඒවා අතරෙන් කවරකට අයත් දැයි තෝරන්න.
For questions **29** and **30**, out of the categories **announcements, instructions, information** and **orders**, select to which category the sentences belong.

29) புகைப்படத்தை இங்கே ஒட்ட வேண்டும்.
1) அறிவித்தல் 2) அறிவுறுத்தல் 3) கட்டளை 4) தகவல்

30) வரிசையாக வந்து அமர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
1) கட்டளை 2) தகவல் 3) அறிவுறுத்தல் 4) அறிவித்தல்

✷ **31** மற்றும் **32** ஆகிய வினாக்களில் 'அ' பிரிவில் உள்ள பகுதியை **முடிப்பதற்குப் பொருத்தமான சொல்** 'ஆ' பிரிவில் உள்ளது. சொற்களை ஒழுங்குமுறையில் கொண்டமைந்த விடைகளைத் தெரிவு செய்க.
31 හා 32 ප්‍රශ්නවල 'அ' යටතේ ඇති කොටසට **ගැළපෙන අවසන් පදය** 'ஆ' කොටසේ ඇත. එය නිවැරදි ලෙස ගළපා ඇති වරණය තෝරන්න.
In questions **31** and **32**, the appropriate ending word for the **pharases** in 'அ' are given in 'ஆ'. Select the option that matches the words correctly.

31)

| | **'அ'** | | **'ஆ'** |
|---|---|---|---|
| 1. | நோயற்ற வாழ்வே | அ. | பொன் குஞ்சு. |
| 2. | அகத்தின் அழகு | ஆ. | காலை விடாதே. |
| 3. | ஆழமறியாமல் | இ. | முகத்தில் தெரியும். |
| 4. | காகத்துக்கும் தன்குஞ்சு | ஈ. | குறைவற்ற செல்வம் |

1) அ, ஆ, இ, ஈ 2) ஆ, அ, ஈ, இ 3) இ, ஈ, அ, ஆ 4) ஈ, இ, ஆ, அ

32)

| | **'அ'** | | **'ஆ'** |
|---|---|---|---|
| 1. | ஐம்பதாவது ஆண்டு கொண்டாடப்படுவது | அ. | பின்பற்றுதல். |
| 2. | குதிரையின் இளையது | ஆ. | குட்டி |
| 3. | அடியொற்றுதல் | இ. | சேட்டை பண்ணுதல். |
| 4. | வாலாட்டுதல் | ஈ. | பொன்விழா |

1) அ, ஆ, இ, ஈ 2) இ, ஈ, அ, ஆ 3) இ, ஈ, ஆ, அ 4) ஈ, ஆ, அ, இ

✷ **33** மற்றும் **34** ஆகிய வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலிற் கொடுக்கப்பட்டுள்ள (அ), (ஆ) என்னும் இரு வாக்கியங்களும் பொருள் **வேறுபடாதவாறு** தனி வாக்கியமாக இணைக்கப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.
33 හා 34 ප්‍රශ්නවල මුලින් දී ඇති (அ) සහ (ஆ) වාක්‍ය දෙක අර්ථය **වෙනස් නොවන සේ** තනි වාක්‍යයක් ලෙස නිවැරදිව සම්බන්ධ කර ඇති වාක්‍යය තෝරන්න.
In questions **33** and **34**, select the sentence that combines the two sentences (அ) and (ஆ) correctly **without changing** the meaning.

33) (அ) காமினி வரைந்தான்.
(ஆ) சமன் வரைந்தான்.
1) காமின், சமன் வரைந்தான்.
2) காமினியும் சமனும் வரைந்தார்கள்.
3) காமினியுடன் சமன் வரைந்தான்.
4) காமினியுடன் சமன் வரைந்தார்கள்.

34) (அ) தம்பி படம் வரைந்தான்.
(ஆ) தம்பி நிறம் தீட்டினான்.
1) தம்பி படம் வரைந்து நிறம் தீட்டினான்.
2) தம்பி படம் வரைந்ததால் நிறம் தீட்டினான்.
3) தம்பி நிறம் தீட்ட படம் வரைந்தான்.
4) தம்பி படம் வரைய நிறம் தீட்டினான்.

✷ **35** மற்றும் **36** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள சிங்களச் சொற்களுக்குப் பொருத்தமான **தமிழ்ச் சொல்லைத்** தெரிவு செய்க.
35 හා 36 ප්‍රශ්නවල දී ඇති සිංහල වචනයට ගැළපෙන **දෙමළ වචනය** තෝරන්න.
In questions **35** and **36**, select the **Tamil word** that matches the Sinhala word.

35) දූපත 1) கிராமம் 2) நகரம் 3) தீவு 4) கடல்

36) දුක 1) தூக்கம் 2) துக்கம் 3) ஆக்கம் 4) நோக்கம்

✷ பின்வரும் வரைபை அவதானித்து **37** தொடக்கம் **40** வரையான வினாக்களுக்குச் **சரியான விடையைத்** தெரிவு செய்க.
පහත දී ඇති ප්‍රස්තාරය අධ්‍යයනය කොට 37 සිට 40 තෙක් ප්‍රශ්නවලට **නිවැරදි පිළිතුර** තෝරන්න.
In questions **37** to **40**, study the graph and choice the **correct answer** from those given below.




37) அதிக எண்ணிக்கையான மாணவர்கள் விரும்பும் பழம் எது?
1) தோடம்பழம் 2) அப்பிள்பழம் 3) கொய்யாப்பழம் 4) வாழைப்பழம்

38) கொய்யாப்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?
1) பத்து 2) இருபத்தைந்து 3) இருபது 4) ஐந்து

39) பத்து மாணவர்கள் எந்தப் பழத்தை விரும்புகின்றனர்?
1) வாழைப்பழம் 2) கொய்யாப்பழம் 3) அப்பிள்பழம் 4) தோடம்பழம்

40) தோடம்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையை விடக் குறைவான எண்ணிக்கையான மாணவர்கள் விரும்பும் பழம் எது?
1) வாழைப்பழம் 2) கொய்யாப்பழம் 3) அப்பிள்பழம் 4) மாதுளம் பழம்

සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

මධ්‍යම පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மத்திய மாகாண கல்வித் திணைக்களம்
Department of Education Central Province

தரம் : 11
11 ශ්‍රේණිය

க.பொ.த (சா/த) முன்னோடிப் பரீட்சை - 2019

| 65 | T | II |
|---|---|---|

இரண்டாம் மொழி - தமிழ் I, II
දෙවන බස - දෙමළ I, II

(65) இரண்டாம் மொழி - தமிழ்
வினாத்தாள் II

**கவனிக்க :**
- **பகுதி I** இலுள்ள **இரண்டு** வினாக்களுக்கும் **பகுதி II** இல் இருந்து **ஏதேனும் ஒரு** வினாவுக்கும் **பகுதி III** இலுள்ள **இரண்டு** வினாக்களுக்குமாக **மொத்தம் ஐந்து** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை எழுதுக.

සැලකිය යුතුයි :
- **I** කොටසෙහ් ප්‍රශ්න දෙකටත්, **II** කොටසේ එක් ප්‍රශ්නයකටත්, **III** කොටසෙහි ප්‍රශ්න දෙකටත් වශයෙන් ප්‍රශ්න පහකට පමණක් පිළිතුරු සපයන්න.

**Note :**
- Answer **only five** questions including the **two** questions in **Part I** and selecting **one** question from **Part II** and **two** questions in **Part III**.

## பகுதி I

01) பின்வரும் தலைப்புக்களில் **ஒன்றைத்** தெரிவுசெய்து தரப்பட்ட விடயங்களை உள்ளடக்கி ஏறத்தாழ **100 சொற்களில்** அமையுமாறு **கட்டுரை** ஒன்று எழுதுக.
දෙන ලද තොරතුරුවලට අනුව පහත මාතෘකාවලින් එකක් පිළිබඳ වචන 100 ක පමණ රචනයක් ලියන්න.
Write an **essay** in about **100 words** on **any one** of the following topics according to the given information.

அ. எமது நாட்டின் ஊடகங்கள்
1) ஊடகங்கள் தொடர்பான அறிமுகம்
2) ஊடகங்களின் வகைகள்
3) எமது நாட்டிலுள்ள தமிழ் ஊடகங்கள்
4) ஊடகங்களின் நன்மைகள்

ஆ. நான் ரசித்த கலை விழா
1) கலை விழா பற்றிய அறிமுகம்
2) கலை விழா ஏற்பாடு செய்தமைக்கான காரணம்
3) கலை விழாவில் மேடையேறிய நிகழ்ச்சிகள்
4) கலை விழாவில் என்னைக் கவர்ந்த அம்சங்கள்

இ. கிழிந்த புத்தகப்பையின் சுயசரிதை.
1) புத்தகப்பையின் இன்றைய நிலை
2) புத்தகப்பையின் தயாரிப்பு
3) புத்தகப்பையின் பயன்பாடுகள்
4) இன்றைய நிலைக்கான காரணங்கள்

ஈ. டெங்கு நோயை ஒழிப்போம்.
1) டெங்கு நோய் பற்றிய அறிமுகம்
2) டெங்கு நோய் தொற்றுவதற்கான காரணங்கள்
3) டெங்கு நுளம்புகளை ஒழிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்
4) டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக உமது பங்கு.

உ. பயணிகளைக் கவர்ந்த ஒரு தேசிய வனம்
1) தேசிய வனத்தின் அமைவிடம்
2) தேசிய வனத்தின் பிரிவுகள்
3) தேசிய வனத்திலுள்ள விலங்கினங்களும் பறவையினங்களும்
4) பயணிகள் பார்வையிடுவதற்கான ஒழுங்குகள்

02) பின்வரும் படத்தை அடிப்படையாகக் கொண்டு **கருத்துள்ள வாக்கியங்கள் ஐந்து** எழுதுக. ஒரு வாக்கியத்தில் குறைந்தது நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்.
පහත සඳහන් පින්තූරය පදනම් කර ගනිමින් **අර්ථවත් වාක්‍ය පහක්** ලියන්න. සෑම වාක්‍යයකම, වචන හතරකට නොඅඩුව තිබිය යුතු ය.
Write **five meaningful sentences** based on the picture given below. Each sentence should contain at least four words.



## பகுதி II

✷ **3, 4** ஆம் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றுக்கு மாத்திரம்** விடை எழுதுக.
3 සහ 4 ප්‍රශ්නවලින් **එකකට පමණක්** පිළිතුරු ලියන්න.
Answer **only one** question from 3 and 4.

03) பின்வரும் பாடலை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியங்களில்** விடை எழுதுக.
පහත කවි පෙළ කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු සපයන්න.
Read the following poem and answer the questions given below in **complete sentences.**

தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்
    தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை,

தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
    தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
    எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்.

தேனொத்த பண்டங்கள் கொண்டு - என்ன
    செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்
மானொத்த பெண்ணடி என்பான் - சற்று
    மனமகிழும் நேரத்தி லேகிள்ளி விடுவான்.

1) பாடலில் வரும் விளையாட்டுப்பிள்ளை யார்?

2) பண்டங்களை எங்கு வைப்பான்?

3) மனம் மகிழும் நேரத்திலே என்ன செய்வான்?

4) எதனை எச்சிற்படுத்திக் கடித்துக் கொடுப்பான்?

5) பாடலில் வரும் மிருகமொன்றின் பெயரைக் குறிப்பிடுக.

04) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு **பூரணமான வாக்கியத்தில்** விடை எழுதுக.
පහත දැක්වෙන ඡේදය කියවා, අසා ඇති ප්‍රශ්නවලට **සම්පූර්ණ වාක්‍යවලින්** පිළිතුරු ලියන්න.
Read the following passage and answer the questions given below in **complete sentences.**

> இராமாயணம் இந்தியாவின் தொன்மையான இதிகாசங்களுள் ஒன்று. இதனை மிகப் பெரிய இதிகாசம் என்பர். இதைத் தமிழில் எழுதியவர் கம்பர். கம்பர் கம்பராமாயணம் பாடிப் பெரும் புகழ் பெற்றார்.
>
> கம்பர் பசியுடைய பூனை ஒன்று பாற்கடலைக் கண்டு நக்கிக் குடித்துவிட ஆசை கொண்டது போல தன் முயற்சி என ஒப்பிடுகிறார்.
>
> கம்பராமாயணத்தை எழுத, கம்பனுக்குத் துணையாக இருந்தவர் சடையப்ப வள்ளல். கம்பராமாயணம் மற்றைய இராமாயணங்களை விடவும் இலக்கியச் சிறப்புமிக்கது.
>
> கம்பனைப் போல் சிறந்த கவி தமிழுக்குக் கிடைத்தமை தமிழ் செய்த பாக்கியம். தமிழ் வாழும் மட்டும் கம்பன் பெயர் வாழும்.

1) இந்தியாவின் மிகப்பெரிய இதிகாசம் யாது?
2) கம்பர் எதனைப் பாடி பெரும் புகழ் பெற்றார்?
3) கம்பனுக்குத் துணையாக இருந்தவர் யார்?
4) இலக்கியச் சிறப்பு மிக்கது எது?
5) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விலங்கு யாது?

## பகுதி III

✹ **5, 6** ஆம் வினாக்களுக்கு விடை எழுதுக.
5 සහ 6 ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.
Write answer to the questions **5** and **6**.

05) உமது பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டி பற்றி உமது நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.
ඔබ පාසලේ පැවත්වූ නිවාසාන්තර ක්‍රීඩා උත්සවය පිළිබඳව ඔබේ මිතුරාට ලිපියක් ලියන්න.

**அல்லது**

பேராதெனிய விஜய தேசியப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா 2019-11-29 ஆந் திகதி நடைபெறவுள்ளது. இதற்குப் பொருத்தமான நிகழ்ச்சி நிரலொன்றைத் தயாரிக்குக.
පේරාදෙණිය විජය ජාතික පාසලේ වාර්ෂික ත්‍යාග ප්‍රදානෝත්සවය 2019-11-29 දින පැවැත්වීමට නියමිතයි. මෙයට සුදුසු න්‍යාය පත්‍රයක් සකස්කරන්න.

06) பின்வரும் சிங்கள வாக்கியங்களை **அல்லது** ஆங்கில வாக்கியங்களை **தமிழில்** மொழிபெயர்க்குக.
පහත දැක්වෙන සිංහල වාක්‍ය **හෝ** ඉංග්‍රීසි වාක්‍ය **දෙමළ** භාෂාවට පරිවර්තනය කරන්න.
Translate the following Sinhala sentences **or** English sentences into **Tamil.**

| | |
|---|---|
| 1) ඔබේ ලිපිනය කුමක් ද? | 1) What is your address? |
| 2) මම උදෑසනම අවදි වෙමි. | 2) I wake up early morning. |
| 3) මම පන්ති කාමරය පිරිසිදු කරමි. | 3) I clean the class room. |
| 4) මෙහි කුණු දැමීම තහනම්. | 4) Throwing garbage here is prohibited. |
| 5) මල්ලීගේ උපන් වර්ෂය දන්නවා ද? | 5) Do you know your brother's year of birth? |

**அல்லது**

நகரமொன்றில் சந்திக்கும் ஒருவரிடம் வங்கிக்கு செல்லும் வழியைக் கேட்டறிவது பற்றிய உரையாடல் ஒன்றை 50 சொற்களில் எழுதுக.
නගරයක හමුවන අයෙකුගෙන් බැංකුවට යන මාර්ග අසා දැනගැනීම පිළිබඳව දෙබසක් වචන 50 පමණ ඇතුළත් වන සේ ලියන්න.
Use about 50 words in a conversation with a person you meet in the city giving directions to the bank.

## ஆண்டிறுதிப் பரீட்சை - 2019
## இரண்டாம் மொழி (தமிழ்) (65) - தரம் 11
## விடைப்பத்திரம் - පිළිතුරු පත්‍රය

### பத்திரம் I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 11 | 3 | 21 | 1 | 31 | 4 |
| 2 | 1 | 12 | 4 | 22 | 1 | 32 | 4 |
| 3 | 3 | 13 | 3 | 23 | 1 | 33 | 2 |
| 4 | 4 | 14 | 2 | 24 | 3 | 34 | 1 |
| 5 | 1 | 15 | 3 | 25 | 2 | 35 | 3 |
| 6 | 4 | 16 | 1 | 26 | 4 | 36 | 2 |
| 7 | 2 | 17 | 3 | 27 | 4 | 37 | 2 |
| 8 | 1 | 18 | 4 | 28 | 2 | 38 | 3 |
| 9 | 3 | 19 | 3 | 29 | 2 | 39 | 4 |
| 10 | 1 | 20 | 3 | 30 | 4 | 40 | 1 |

(1x40=40 புள்ளிகள்)

### பத்திரம் II
### பகுதி I

01) அ. எமது நாட்டின் ஊடகங்கள்

1) ஊடகங்கள் தொடர்பான அறிமுகம்
- ஊடகங்களால் தொடர்பாடல் இடம்பெறுதல்.
- புதிய கருத்துக்களை ஊடகங்கள் வழங்குதல்.

2) ஊடகங்களின் வகைகள்
- இலத்திரனியல் ஊடகம்/ அச்சு ஊடகம்
- இலத்திரனியல் ஊடகம்
  1. வானொலி
  2. தொலைக்காட்சி
  3. இணையம்
- அச்சு ஊடகம்
  1. பத்திரிகைகள்  2. சஞ்சிகைகள்

3) எமது நாட்டிலுள்ள தமிழ் ஊடகங்கள்
- அச்சு ஊடகங்கள்
  தினகரன், வீரகேசரி, தினக்குரல், சுடரொளி, நவமணி முதலானவை..
  வடக்கிலிருந்து உதயன், வலம்புரி, தினமுரசு முதலானவை...
- இலத்திரனியல் ஊடகங்கள்
  தமிழ் தொலைக்காட்சி (வசந்தம், நேத்ரா, வர்ணம், சக்தி போன்றவை..
  தமிழ் வானொலி (தென்றல், சூரியன் எப்எம், சக்தி எப்எம் போன்றவை.

4) ஊடகங்களின் நன்மைகள்
- புதிய தகவல்களை மக்களுக்கு வழங்குதல்.
- மக்களுக்கு நல்வழிகாட்டுதல்.
- ஆபத்துக்கள்/ பாதிப்புக்களிலிருந்து பாதுகாத்தல்.
- மொழி விருத்திக்கு உதவுதல் போன்றவை..

ஆ. நான் இரசித்த கலை விழா

1) கலை விழா பற்றிய அறிமுகம்
- இடம், காலம், பங்குபற்றிய அதிதிகள் முதலான தகவல்கள்
- ஏற்பாடு செய்த அமைப்பு/ சங்கம்/ பாடசாலை முதலான விபரங்கள்

2) கலை விழா ஏற்பாடு செய்தமைக்கான காரணம்
- திறமைகளை வெளிக்கொணர்வதற்கான வாயப்பினை ஏற்படுத்தல்.
- திறமை மிக்க கலைஞர்களை ஊக்குவிக்க சந்தர்ப்பமளித்தல்.
- புதிய கலைஞர்களை உருவாக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தல்.

- கலைஞர்களின் செயற்றிறன் அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகும்.

3) கலை விழாவில் மேடையேறிய நிகழ்ச்சிகள்
   - நாடகங்கள் • நடனங்கள் • குழு/ தனிப்பாடல்கள்
   - நகைச்சவை அம்சங்கள் • இசை நிகழ்ச்சிகள் முதலானவை..

4) கலை விழாவில் என்னைக் கவர்ந்த அம்சங்கள்
   - நாடகம்/ நடனம்/ பாடல் முதலான ஏதாவதொன்றுக்கு அல்லது பலவற்றில் கவர்ந்த சுவையான அம்சத்தை விபரித்தல்.
   - பொருத்தமாக கட்டுரையை நிறைவு செய்தல்.

இ. கிழிந்த புத்தகப்பையின் சுயசரிதை.

1) புத்தகப்பையின் இன்றைய நிலை
   - யாருக்கும் தேவையற்ற நிலையில் இருத்தல்.
   - ஒதுக்குப் புறத்தில் இருத்தல்.
   - பரிதாபமாக/ துன்பம் தரும் நிலையில் காணப்படுதல்.

2) புத்தகப்பையின் தயாரிப்பு
   - தயாரித்த நிறுவனம்/ இடம்/ தொழிலாளர்கள்
   - தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்கள்
     உதாரணம் : நூல், இறப்பர் அல்லது பிளாஸ்திக் துணி முதலானவை
   - வடிவமைப்பு/ அலங்காரப்படுத்தப்படல்/ இலட்சினைகள் பொறித்தல்/ பெயரிடுதல் முதலானவை..

3) புத்தகப்பையின் பயன்பாடுகள்
   - எங்கு, எப்படி, யாரால், எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதை விபரித்தல்.
   - பயன்படுத்தப்பட்ட காலம்

4) இன்றைய நிலைக்கான காரணங்கள்
   - கிழிந்தமைக்கான காரணங்கள்
   - இன்று பாவிக்கும் போது ஏற்படும் பாதிப்புகள்
   - வலிமைத் தன்மை குறைந்திருப்பதால் ஏற்படும் விளைவுகள்

ஈ. டெங்கு நோயை ஒழிப்போம்

1) டெங்கு நோய் பற்றிய அறிமுகம்
   - டெங்கு நோயும் நாட்டின் இன்றைய நிலையும்
   - இதன் பயங்கர நிலையும், உயிராபத்துக்களும்

2) டெங்கு நோய் தொற்றுவதற்கான காரணங்கள்
   - சுத்தமான நீர் தேங்கிய இடங்களில் டெங்கு நுளம்புகள் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்தல்.
   - சிரட்டைகள்/ யோகட் கோப்பைகள்/ பாத்திரங்களை கண்டபடி வீசுதல்.
   - சுற்றாடல் சுத்தம் பேணுவதன் அசட்டைத்தனம் முதலிய காரணங்களைக் குறிப்பிடுதல்.

3) டெங்கு நுளம்புகளை ஒழிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்
   - நீர் தேங்கி நிற்கும் இடங்களை ஒழித்தல்.
   - நீர் தேங்கும் கூரைப்பீலிகளைச் சுத்தப்படுத்தல்.
   - சுற்றாடல் சுத்தம் காத்தல்.
   - சிரமதான நடவடிக்கைகளுடாக நுளம்பு பரவுவதைத் தடுத்தல்.
   - பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

4) டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக உமது பங்கு.
   - வசிப்பிடத்தில் சுற்றாடலில் டெங்கு தடுப்புக்கான பங்கினை விபரித்தல்.
   - ஆலோசனைகள் முன்வைத்தல்.

உ. பயணிகளைக் கவர்ந்த ஒரு தேசிய வனம்

1) தேசிய வனத்தின் அமைவிடம்
   - நாடு/ அமைந்துள்ள பிரதேசம்
   - பரப்பளவு

2) தேசிய வனத்தின் பிரிவுகள்
   - பிரிக்கப்பட்டுள்ள எல்லைகள் பற்றிய குறிப்பு
3) தேசிய வனத்திலுள்ள விலங்கினங்களும் பறவையினங்களும்
   - தேசிய வனத்தில் காணப்படும் விலங்கின வகைகள்
   - பறவை இனங்களின் வகைகள்
4) பயணிகள் பார்வையிடுவதற்கான ஒழுங்குகள்
   - தினமும் பயணிகள் பார்வையிடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரங்கள்
   - பயணிகள் அனுமதிக்கப்படாத காலங்கள் இருப்பின் அது பற்றி குறிப்பிடுதல்.

**(20 புள்ளிகள்)**

02) • படத்தை அடிப்படையாகக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்கள் ஐந்து எழுதுதல்.
- ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆகக் குறைந்தது நான்கு சொற்களேனும் இருத்தல் வேண்டும்.

1) இது ஒரு சுற்றுலா செல்லும் காட்சியாகும்/ இது ஒரு அழகிய பேருந்து/ பஸ் படமாகும்.
2) மாணவர்கள்/ சிறுவர்கள்/ பஸ்ஸில்/ பேரூந்தில் சுற்றுலா/ பயணம் செல்கிறார்கள்
3) அழகான/ இந்து/ கோயில் ஒன்று உள்ளது/ இருக்கிறது.
4) இங்கே நிறைய மரங்கள்/ காட்சி தருகின்றன/ காணப்படுகின்றன.
5) அந்த/ இந்த/ பஸ்/ பேரூந்து வேகமாகச் செல்கிறது.
6) பேரூந்தின்/ பஸ்ஸின் கூரையில்/ மேலே நிறைய பொதிகள்/ பைகள் காணப்படுகின்றன/ இருக்கின்றன.
7) கோயில் அருகே பேரூந்து/ பஸ் செல்கிறது.
8) பனை மரங்கள் அழகாகக் காட்சி தருகின்றன.
9) சாரதி பஸ்ஸை/ பேரூந்தை வேகமாக/ மெதுவாக ஓட்டுகிறார்.

- இவை போன்ற படத்திற்குப் பொருத்தமான வாக்கியங்களைக் கவனித்துப் புள்ளி வழங்குக.

☛ முழுமையான வழுவற்ற வாக்கியம் 02 புள்ளிகள்
☛ எழுத்துப்பிழையின்றி இருப்பின் 01 புள்ளி

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

## <u>பகுதி II</u>

03) 1) பாடலில் வரும் விளையாட்டுப் பிள்ளை கண்ணன் ஆகும்/ விளையாட்டுப்பிள்ளையின் பெயர் கண்ணன் ஆகும்.
2) பண்டங்களை எட்டாத உயரத்தில் வைப்பான்/ எட்டாத உயரத்தில் பண்டங்களை வைப்பான்.
3) மனம் மகிழும் நேரத்தில் கிள்ளி விடுவான்/ மனம் மகிழும் நேரத்திலே கிள்ளி விடுவான்.
4) பழத்தை எச்சிற்படுத்திக் கடித்துக் கொடுப்பான்.
5) பாடலில் வரும் மிருகம் மான் ஆகும்/ பாடலில் வரும் மிருகத்தின் பெயர் மான் ஆகும்.

☛ முழுமையான வழுவற்ற வாக்கியம் 02 புள்ளிகள்
☛ எழுத்துப்பிழையின்றி விடையிருப்பின் 01 புள்ளி

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

04) 1) இந்தியாவின் மிகப்பெரிய இதிகாசம் இராமாயணம் ஆகும்/ இராமாயணம் இந்தியாவின் மிகப்பெரிய இதிகாசம் ஆகும்.
2) கம்பர் கம்பராமாயணம் பாடிப் பெரும் புகழ் பெற்றார்/ கம்பராமாயணம் பாடி கம்பர் பெரும் புகழ் பெற்றார்.
3) கம்பனுக்குத் துணையாக இருந்தவர் சடையப்ப வள்ளல் என்பவர்/ ஆகும்/ கம்பனுக்குத் துணையாக சடையப்ப வள்ளல் இருந்தார்.
4) இலக்கியச் சிறப்பு மிக்கது கம்பராமாயணம் ஆகும்/ கம்பராமாயணம் இலக்கியச் சிறப்பு மிக்கதாகும்.
5) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விலங்கு பூனை ஆகும்/ பூனையே இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விலங்காகும்.

☛ முழுமையான வழுவற்ற வாக்கியம் 02 புள்ளிகள்
☛ முழுமையற்ற வாக்கியம் 01 புள்ளி
☛ எழுத்துப்பிழையின்றி விடையிருப்பின் 01 புள்ளி

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

## பகுதி III

05) **கடிதம் எழுதுதல்**

- அமைப்பு
  1. முகவரி 2. விடயம்
  3. விளிப்பு 4. முடிப்பு, ஒப்பம்
- உள்ளடக்கம்
  1. விளையாட்டுப் போட்டி நடைபெற்ற இடம், காலம் பற்றி தெளிவாக குறிப்பிடல்.
  2. நிகழ்வுகள் பற்றி தெளிவாக குறிப்பிடல்.
- மொழிநடை
  1. கருத்துத் தெளிவு 2. வழுக்கள் இல்லாதிருத்தல்
  3. எளிய நடை

☛ அமைப்பு 03 புள்ளி
☛ உள்ளடக்கம் 04 புள்ளி
☛ மொழிநடை 03 புள்ளி

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

**நிகழ்ச்சி நிரல்**

- அமைப்பு
  1. தலைப்பு 2. இடம்/ காலம் / நேரம்
  3. நன்றியுரை / வரவேற்புரை
- உள்ளடக்கம்
  1. நிகழ்ச்சியின் பெயர்/ தலைப்பு 2. பங்குபற்றுவோர் பற்றிய விபரங்கள்
- மொழிநடை
  1. தெளிவு 2. சுருக்கமான தகவல்
  3. வழுக்களின்மை

☛ அமைப்பு 03 புள்ளி
☛ உள்ளடக்கம் 04 புள்ளி
☛ மொழிநடை 03 புள்ளி

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

06) **மொழி பெயர்ப்பு**

1) உங்களுடைய/ உன்னுடைய/ உங்கள்/ உங்களின்/ உனது/ உமது முகவரி என்ன?
2) நான் காலையிலேயே எழும்புவேன்.
3) நான் வகுப்பறையைச் சுத்தம் செய்கிறேன்.
4) இங்கே/ இங்கு குப்பைப் போடுவது தடை.
5) தம்பியின் பிறந்த வருடம்/ ஆண்டு தெரியுமா?

☛ முழுமையான வழுவற்ற வாக்கியம் 02 புள்ளி
☛ எழுத்துப்பிழை இருப்பின் 01 புள்ளி

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

**அல்லது**

**உரையாடல்**

அமைப்பு ☛ உரையாடல் ஒழுங்கில் எழுதல் 03 புள்ளி
உள்ளடக்கம் ☛ தலைப்புக்குப் பொருத்தமானதாக இருத்தல் 04 புள்ளி
மொழிநடை ☛ பேச்சுமொழி
☛ கருத்துத்தெளிவு
☛ வழுக்கள் இல்லாமை } 03 புள்ளி

**(2 x 5 = 10 புள்ளிகள்)**

* * * * * *

LOL.lk
Learn Ordinary Level

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

## පසුගිය විභාග ප්‍රශ්න පත්‍ර



• Past Papers • Model Papers • Resource Books
for G.C.E O/L and A/L Exams

සමනල දැනුම

විභාග ඉලක්ක ජයගන්න
Knowledge Bank

Master Guide

WWW.LOL.LK

CASH ON DELIVERY

HOME DELIVERY

Whatsapp contact
+94 71 777 4440

Website
www.lol.lk

Order via WhatsApp

071 777 4440